## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 121 of 2019

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.புகழ்பாரி |
| தந்தை பெயர் | : | திரு. லட்சாதிபதி |
| பி.வா.த.சா | : | |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் **17.02.2026** அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பி.வா.த.சா. 1 - மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

வாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.

**1.**எனது ஊர் இராசாபாளையத்தில் முத்து மாரியம்மன் கோவில் உள்ளது. மேற்படி கோவில் பராமரிப்பிற்காக எங்கள் தரப்பில் பொதுநலச் சங்கம் ஆரம்பித்துள்ளோம். பிரதிவாதி சான்றாவணம் 1- 2019ம் ஆண்டு மேற்படி நலச்சங்கத்தை பதிவு செய்தததற்கான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணைவிதிகள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் அந்த சங்கத்தின் உறுப்பினர் ஆகவும் உள்ளேன். கௌரவத் தலைவராகவும் உள்ளேன். சங்கத்தில் 19 உறுப்பினர்கள் உள்ளார்கள்.

**2.**சங்கத்தின் கணக்கு வழக்குகளை ஊரில் நாங்களே பார்த்துக்கொள்வோம். சங்கத்தின் பதிவாளர்களிடம் ஒப்படைப்பது கிடையாது. ஒவ்வொரு வருடமும் கணக்கு வழக்குகளை பதிவாளரிடம் ஒப்படைத்து பதிவாளரிடம் சங்கத்தை புதுபித்து கொள்ள வேண்டும் என்ற விதி எனக்கு தெரியும். ஆனால் நாங்கள் அவ்வாறு செய்வதில்லை. நான்தான் சங்கத்தின் கௌரவத் தலைவர் என்ற ஆவணம் உள்ளதென்றால் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 16:19:04 -0500

3.ராஜா என்ற நபர் யார் என்றால் அவர் துக்கனாம்பாக்கம் பஞ்சாயத்தில் துணை தலைவராக 2021 -2025 ல் இருந்தார். அவரும் இந்த சங்கத்தில் உறுப்பினர் மற்றும் செயலாளராக உள்ளார். இன்று அவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை. ராஜா என்பவர் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 175/2019 தற்போது வழக்கிலுள்ள பிரச்சனை சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்து இருந்தார். மேற்படி வழக்கை ராஜா மற்றும் அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்றுக்கொண்டனர். மேற்படி வழக்கில் BDO,தாசில்தார் ,சார் ஆட்சியர் மற்றும் ஆட்சியர் தரப்பினராக சேர்க்கப்பட்டு இருந்தார்கள். அவர்கள் மேற்படி வழக்கில் ஆஜர் ஆகாமல் ஒருதலைபட்சமாக வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான்.

4.மேற்படி வழக்கில் இதே வழக்குசொத்தில் நீர்தேக்க தொட்டி கட்டித்தர BDO விற்கு உத்தரவு இட வேண்டும் என்று பரிகாரம் கேட்கப்பட வேண்டும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ராஜா என்னிடம் சொல்லிவிட்டுதான் மேற்படி வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டாரா என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் துக்கனாம்பாக்கம் பஞ்சாயத்து தலைவர் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. துக்கனாம்பாக்கம் பஞ்சாயத்திற்கு நீர்தேக்கத்தொட்டி உள்ளனவா என்றால் 5 நீர்தேக்கத்தொட்டிகள் உள்ளன. அதில் வழக்கு சொத்தில் உள்ள நீர்த்தேக்கத்தொட்டி பழுது ஆகிவிட்டது.

5.மேற்படி வழக்கில் துக்கனாம்பாக்கம் பஞ்சாயத்து தலைவர் ஏன் சேர்க்கப்படவில்லை என்றால் இராசாப்பாளையம் கிராமத்திற்கு தான் தண்ணீர் பற்றாக்குறை இருந்தது அதனால் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை. இராசாப்பளையம் துக்கணாம்பாக்கம் பஞ்சாயத்து கீழ்தான் வருகிறது என்றால் சரிதான். மீதமுள்ள 4 நீர்தேக்கதொட்டிகள் கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் எனக்கு சரியாக தெரியாது. சமீபத்தில் கூட ஒரு நீர்தேக்கத்தொட்டி கட்டப்பட்டுள்ளது.

6.குப்புசாமி என்பவர் யார் என்றால் எனக்கு சொந்த பெரியப்பா ஆவார். அவர் இராசாபாளையத்தில் இருக்கிறார். அவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்துவரும் வழக்கை கவனித்துக்கொள்கிறார். இந்த வழக்கு சொத்தில் கட்டப்பட்டு இருந்த



M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 16:19:14 -0500

நீர்தேக்கத்தொட்டி 2017-2018 காலத்தில் இடிந்துவிட்டது.

7.நீர்தேக்கத்தொட்டி கட்டுவதற்கு 3 செண்ட் நிலம் கொடுத்தது உண்ணாமலை அம்மாள் ஆவார். மேற்படி நிலம் நீர்தேக்கத்தொட்டி கட்டுவதற்காக மட்டுமே கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கும் மற்றும் பொதுகாரியங்களுக்கும் சேர்த்து தான் கொடுக்கப்பட்டது. அதில் 1 செண்ட் இடத்தில் ஆழ்துளை கிணறு மின்சார மோட்டார் செட் பம்பு செட் உள்ளது. மேற்படி நீர்தேக்கத்தொட்டி எந்த காலத்தில் இடிந்து விழுந்தது என்று இந்த வழக்கிலும் அசல் வழக்கு எண் 175/2019 வழக்கிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் இரு வழக்குகளிலும் 4 நீர்தொட்டிகள் கிராமத்தில் உள்ளது என்று சொல்லவில்லை என்ற்ால் சரிதான்.

8.வாதி பெயரில் கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று குப்புசாமி என்பவர் சார் பதிவாளரிடம் மனு கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் கொடுத்த மனுவின் பெயரில் சார் பதிவாளர் உத்தரவு பிறப்பிக்காததால் குப்புசாமி உயர்நீதிமன்றத்தை அணுகி சார் பதிவாளர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. WP No.30470/2019 என்ற வழக்கை அவர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவின்பேரில் நாங்கள் பதிவாளரை அணுகவில்லை என்றால் மேற்படி வாதி பெயரில் இருந்த செட்டில்மெண்ட் பத்திரம் இரத்து செய்யப்பட்டதாக எங்களுக்கு தகவல் வந்துவிட்டது. மேற்படி ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9.குப்புசாமி தாக்கல் செய்த ரிட் மனு மீது வாதி மேல்முறையீடு செய்தார் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் இந்த வழக்கில் நிவாரணம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவு இடப்பட்டு இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாதி கொட்டகை கட்டி உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை சுற்றி வேலி அமைக்க வேண்டும் என்று நான் மனு கொடுத்தேன். வேலி அமைக்க BDO உத்தரவு போட்டார். ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து வழக்கு சொத்தின் பட்டா அரசின் பெயரில் மாற்றம் செய்ய மனு



M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 16:19:20 -0500

கொடுத்ததன் பேரில் 2022ம் ஆண்டு BDO பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது.

2021-25 வரை துக்கனாம்பாக்கம் பஞ்சாயத்து தலைவல் யார் இருந்தார் என்றால் ஏலக்கன்னி என்பவர் இருந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் 07.12.2024 தேதியிட்ட சான்றிதழ் மேற்படி தலைவர் கொடுத்த சான்றிதழ் தானா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உயர்நீதிமன்றத்தில் இருந்த வழக்குகளில் 4 நீர்தேக்கத்தொட்டிகள் இருப்பதாக நாங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான்.ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு ஊர் மக்களுக்கு விநியோகம் செய்வதாகத்தான் உயர்நீதிமன்றத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அவ்வாறு இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்உரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

10.கிராமத்தில் ஏற்கனவே 4 நீர்தேக்கத்தொட்டிகள் இருந்தும் வழக்குசொத்தில் நீர்தேக்கத்தொட்டி ஏன் கட்டப்பட வேண்டும் என்றால் கிராம மக்களுக்காக கட்டவேண்டும். எங்கள் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலம் என்று எதுவும் இல்லை. 4 நீர்தேக்கதொட்டிகள் தனியார் நிலத்தில் கட்டப்பட்டுள்ளதா அல்லது அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வேறு இடத்தில் நீர்தேக்கத்தொட்டி கட்டித்தறுமாறு BDO அலுவலரிம் மனு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுத்தோம். ஆனால் அவர்கள் அரசில் பணம் ஒதுக்கவில்லை என்று சொல்விவிட்டார்கள் (சாட்சி தற்போது வேறு இடத்தில் அவ்வாறு கட்டித்தர கேட்கவில்லை என்றும் வழக்குசொத்தில் தான் தண்ணீர் தொட்டி கட்டித்தர கேட்டதாக கூறினார்).

11.இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்து வழக்கை நடத்துகிறார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று நான்தான் வழக்கில் சேர்ந்தேன்.வழக்கு சொத்தில் தான் தண்ணீர் தொட்டி கட்டவேண்டும் என்று எனக்கு ஏன் தனி அக்கறை உள்ளது என்றால் எனது தகப்பனார் ஊர் துணைத் தலைவராக இருந்தார். ஊர் மக்களுக்காக வழக்கு



M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 16:19:26 -0500

சொத்தை அவர் தான் எழுதி வாங்கினார். எனக்கு மற்றும் எனது தந்தைக்கு வழக்கு சொத்தில் தனிப்பட்ட பாத்தியம் எதுவும் கிடையாது. அந்த சமயத்தில் சீனிவாச நாயுடு பஞ்சாயத்து தலைவராக இருந்தார். வா.த.சா.ஆ. 1ல் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். ராஜா என்பவர் எனது தகப்பனாரின் தம்பி மகன். எங்கள் குடும்பத்திற்கு விவசாய நிலம் உள்ளது. வீட்டுமனைகளில் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம்.

12.எங்கள் நிலத்தில் ஏன் 3 செண்ட் நிலம் கொடுக்க முன்வரவில்லை என்றால் எங்கள் தேவைக்கு தான் நிலம் உள்ளது. அரசு கேட்டால் நாங்கள் கொடுக்க தயாராக உள்ளோம். எனக்கோ 6-ம் பிரதிவாதி பஞ்சாயத்திற்கோ வழக்கு சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் கோவில் பராமரிப்பிற்காக சங்கத்தை அமைத்து கொண்டு இந்த வழக்கில் முகாந்திரம் இல்லாமல் ஆஜர் ஆகியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் சங்கத்தின் துணைவிதிகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் ராஜா என்பவரும் தலைவராக கூறிக்கொண்டு இருக்கிறோம் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 175/2019 எங்களுக்கு எதிராக தீர்ப்பு ஆகிவிடும் என்பதை அறிந்து திரும்பப்பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு முறையற்ற வகையில் இந்த வழக்கை நடத்துகின்றேன் என்றால் சரியல்ல.இரண்டு மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட பிரச்சினையில் வாதி என்மீது புகார் அளித்து என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்ன பிரிவுகளில் என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கை நடத்தக்கூடாது என்று வாதியை மிரட்டி அடியாட்களை வைத்து அடித்தேன் என்றால் சரியல்ல. நீர்தேக்கத்தொட்டி கட்டுவதற்காக வாதியின் பாட்டியார் கொடுத்த சொத்தில் இருந்த நீர்தேக்கத்தொட்டி இடிந்து விட்டதால் மேற்படி சொத்து வாதிக்கு பஞ்சாயத்தால் திரும்ப கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்கள் மற்றும் வாக்குமூலம் அளித்து உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தால் திருமப கொடுக்கப்பட்ட சொத்தை பஞ்சாயத்து தலைவரை வழக்கில் சேர்த்தால் தெரிந்துவிடும் என்பதற்காக அவரை வழக்கில் சேர்க்காமல் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு உண்மை என்பதால் தான் அரசு தரப்பில் யாரும் வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல.



M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 16:19:32 -0500

நான் போலி சங்கத்தை வைத்து அரசு அதிகாரிகளை மிரட்டி உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 16:19:37 -0500